அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

ஹேவிளம்பி ஆண்டு ஐப்பசி - கார்த்திகை நவம்பர் 2017 முரசு 11 ஒலி 125



ஜோதி ஜோதி ஜோதி சுயம்
ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்

திருக்கார்த்திகை தீபத் திருவிழா அழைப்பிதழ் உள்ளே...

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# திருகார்த்திகை தீப திருவிழா அழைப்பிதழ்



அன்புள்ளம் கொண்ட ஆன்மநேய அன்பர்கள் அனைவருக்கும் வந்தனம்! நினைத்தாலே முக்தி தரும் திருஅருணை அருணாச்சல திருத்தலத்தில் லட்சோபலட்சம் பக்தர்கள் கூடி தரிசனம் செய்கின்ற தீப திருநாளினை முன்னிட்டு நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் வெகு விமரிசையாக மஹாஅன்னதானம், சாதுக்கள் சத்சங்கம் மற்றும் திருஅருட்பா இசை கச்சேரி ஆகிய நிகழ்ச்சிகள் அடங்கிய பெருவிழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாங்கள் அனைவரும் வருகை தந்து தொண்டில் பங்கேற்று குருவருளையும் திருவருளையும் பெற்று வாழ்வாங்கு வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

டிசம்பர் 02 2017

**நாள்: 02.12.2017 சனிக்கிழமை**

**இடம்: சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், திருவண்ணாமலை.**



**திருஅருட்பா**

**திருவண்ணாமலைப் பதிகம் (3497)**

அருட்பெருங்கடலே ஆனந்த நறவே
அடிநடு அந்தமும் கடந்த
தெருட்பெரு மலையே திருஅண்ணா மலையில்
திகழ்சுயஞ் ஜோதியே சிவனே
மருட்பெருங் கடலின் மயங்குகின்றேன் என்
மயக்கெலாம் ஒழிந்து வன்பிறவி
இருட்பெருங் கடல்விட்டு ஏறநின்
கோயிற்கு எளியனேன் வலவரம் அருளே.

**அன்பர்களை இந்த சத்சங்க விழாவின் அறப்பணிகளுக்கு தங்களால் இயன்ற நன்கொடையை அளித்துப் புண்ணிய கைங்கரியத்தில் பங்குகொண்டு உய்யுமாறு வேண்டுகிறோம்.**

1) மஹா அன்னதானம் 5,000 நபர்களுக்கு ---------- ரூ. 1,50,000/-
2) பிரசாதம் --- கேசரி 30கிலோ ---------- ரூ. 10,000/-
சுக்கு காபி 10,000 நபர்களுக்கு ---------- ரூ. 15,000/-
3) திருஅருட்பா இலவச புத்தகம் 20,000 நபர்களுக்கு ---------- ரூ. 25,000/-
4) சொற்பொழிவாளர்கள் மற்றும் இசை கலைஞர்களுக்கு --- ரூ. 40,000/-
5) பந்தல் மற்றும் ஒலி, ஒளி அமைப்பிற்கு ---------- ரூ. 40,000/-
6) 10 விழாநாட்களிலும் 1 நாள் அன்னதானத்திற்கு ---------- ரூ. 6,500/-

அன்பர்கள் தங்கள் நன்கொடைகளை அறக்கட்டளையின் வங்கிக் கணக்கான

Account details :- Bank: HDFC Bank Ltd,
Name: Arutperunjothi Vallalar Charitable Trust,
A/C.No: **08761450000048**, Branch: Tiruvannamalai,
IFSC Code: HDFC0000876 ல் அளிக்கவும்.

அழைத்து மகிழும்: **அருள்திரு பாபு சாது** தொடர்புக்கு: **+91 88385 40176**

## நிகழ்ச்சி நிரல்

**உலக நலன் வேண்டி நவம்பர் 29ம் தேதி புதன் கிழமை காலை முதல் டிசம்பர் 1ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை வரை தொடர் அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம் நடைபெறவுள்ளது.**

### 01-12-2017: வெள்ளிக்கிழமை

இரவு 7:30 மணிக்கு திருஅருட்பா இசைக்கச்சேரி
தயவுத்திரு ஐயாதுரை அவர்கள், தி.மலை

### 02-12-2017: சனிக்கிழமை

காலை 6:30 - 07:00 இறைவணக்கம் - சன்மார்க்க அன்பர்கள்.
காலை 7:00 - 09:00 திருஅருட்பா இசைக்கச்சேரி
- தயவுத்திரு சண்முகம் அவர்கள், கடலூர்.

காலை 09:01 - 10:00 சிறப்பு சொற்பொழிவு
- தயவுத்திரு குஞ்சிதபாதம், கோவை.

காலை 10:01 - 12:00 திருஅருட்பா இசைக்கச்சேரி
- தயவுத்திரு அரங்கநாதன் அவர்கள், கோவை.

மதியம் 12:01 - 02:00 சிறப்பு சொற்பொழிவு
- தயவுத்திரு இராமலிங்கம் அவர்கள், கோவை.

மாலை 02:01 - 04:00 திருஅருட்பா இசைக்கச்சேரி
- தயவுத்திரு தியான் செந்தில் அவர்கள், பொள்ளாச்சி.

மாலை 04:01 - 05:30 சிறப்பு சொற்பொழிவு
- தயவுத்திருமதி பிரபாவதி அவர்கள், சென்னை.

மாலை 05:31 - 06:30 தீப தரிசனமும் ஜோதி வழிபாடும்
மாலை 06:31 - 08:30 சிறப்பு சொற்பொழிவு
- தயவுத்திரு மு.பா. பாபு அவர்கள், சென்னை.

இரவு 08:31 - 10:30 திருஅருட்பா இசைக்கச்சேரி
- தயவுத்திரு கலைச்செல்வன் அவர்கள், குத்தாலம்.

இரவு 10:31 - 12:00 சிறப்பு சொற்பொழிவு
- தயவுத்திரு குஞ்சிதபாதம், கோவை.

இரவு 12:01 - 02:00 சிறப்பு சொற்பொழிவு
- சாது செல்வம் அவர்கள், தி.மலை.

**!!தொடர் அன்னதானம் நடைபெறும்!!**

### 03-12-2017 ஞாயிற்று கிழமை

மாலை 4:00 - 8:00 சிறப்பு சத்சங்கம்
- சன்மார்க்க சங்கத்து அன்பர்கள், தி.மலை.

இரவு 08:01 முதல் திருஅருட்பா இசைக்கச்சேரி
- தயவுத்திரு ஜீவ சீனுவாசன் அவர்கள், தி.கோவிலூர்.



**அவ்வமயம் அன்பர்கள் அனைவரும் வருகை புரிந்து கேள்வி விருந்தருந்தி மனம் தெளிவடைந்து வாழ்வில் எல்லா வளமும் நலமும் பெற அன்புடன் அழைக்கிறோம்.**





# திருச்செவிக்கு விண்ணப்பம்

*கங்கைநதி நீர் பொருந்திய கொன்றை மலர் அணிந்த சடையை உடைய நிரம்பிய அமுதம் போன்றவனே! எனக்கு நல்லருள் துணைவனானவனே! பொலிவுமிக்க பவள மணிக் குன்றம்போல் திகழ்பவனே! மேலான பேரின்பக் கடலாக விளங்குபவனே! கொடுமை மிகுந்த துன்பத்தால் நலிவுறுகின்ற என்னை 'அப்பனே அஞ்சாதே!' என்று கூறி ஏற்றுக் கொள்வாயாக!*

*நீண்ட மேனியனான திருமாலும், பிரமனும் மற்றுமுள்ள ஏனைய தேவர்களும் எண்ணிப் பார்க்கவும் அரிதான 'திருவடிப்பேறு' என்னும் நற்கதியைப் பக்தர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வலியச்சென்று அளித்தருளும் பரிசுத்தனே! அன்பர்களையெல்லாம் ஆட்கொண்ட உன்னுடைய திருவருள் என்னும் சமுத்திரத்தில் ஒரு சிறிய அணு அளவுத் திவலையாவது என்றன்மேல் வருமாறு தெறிக்கச் செய்வாயேயானால் நான் உய்வு பெறுவேன்; இல்லையென்றால் எளியவனான நான் என்ன செய்வேனோ?*

*சொல்லுதற்கு அரிய பெருமைகளையுடைய மேலான ஜோதி வடிவினனே! திரிநேத்திரங்களையுடைய நெருப்புக் கொழுந்தானவனே! அழகிய கருநிறமுடைய திருமால், பிரமன் முதலியோர் போற்றுகின்ற பெருஞ்சிறப்பு வாய்ந்த மாணிக்க மலை போன்றவனே! எனது குற்றங்கள் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு என்னை, உலகியல் என்னும் இந்த துயரச் சமுத்திரத்திலிருந்து கரையில் எடுத்து விடுத்து உனது அருட் செல்வத்தை நல்குவாயாக!*

திருச்சிற்றம்பலம்

# தெய்வம் ஒன்றே கண்டீர்

இவ்வுலக நிகழ்ச்சியைக் கூர்ந்து நோக்குங்கால் காணப்படும் உலகம் ஓர் நிலையாகிய கட்டுபாட்டுக்கு உட்பட்டு நின்று செயற்படுதல் இனிது புலனாகும். இத்தகைய நியதியோடு பொருந்திய உலகின் இயக்கத்திற்கு வினைமுதலாய் (கர்த்தாவாய்) உடன் நின்று இயக்கி நிற்கும் பேரறிவும், பேராற்றலும், பேரருளும் வாய்ந்த முழுமுதற் பொருளொன்று “உலக உயிர்கட்குச் சார்பாயிருத்தல் வேண்டும்” என்பது அறிஞர் பலரும் ஒப்ப முடிந்த உண்மையாகும்.

இங்ஙனம் எல்லார்க்கும் புலனாகும் நிலையில் காணப்படும் உலக நிகழ்ச்சியாகிய காரியத்தை அடிப்படையாகக் கொண்டு இக்காரியத் துக்குரிய கர்த்தாவாய் உலகுயிர்களை உடன் நின்று இயக்கியருளும் முழுமுதற் பொருளாகிய கடவுள் ஒன்று இருத்தல் வேண்டும் என்பதனை உலகத்தாருக்கு உணர்த்தக் கருதிய திருவள்ளுவர் “அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றே உலகு” என வரும் திருக்குறளால் எடுத்துரைத்தார்.

இத்திருக்குறள் காண்டற்கரிய கடவுளின் உண்மையினைக் கருதல் அளவையால் நிறுவுவதாகும். “எழுத்துக்களெல்லாம் தம்மை உடனிருந்து செலுத்தும் அகர ஒலியினைத் தமக்கு முதலாக உடையன. அதுபோல, உலகமும் தன்னை உடனிருந்து இயக்கிநிற்கும் ஆதிபகவனாகிய இறைவனைத் தனக்கு முதலாக உடையது” என்பது இப்பாடலின் பொருளாகும். இதன்கண் “உலகு” என்றது, உடம்பொடு காணப்பெறும் உயிர்த்தொகுதியாம்.

ஓர் வரையறையுடன் காணப்படும் இவ்வுலக இயக்கமாகிய காரியத்தினை அடிப்படையாகக் கொண்டு இதற்கு நிமித்த காரணமாகிய முழுமுதற் பொருளொன்று உண்டு எனத் துணிய வேண்டியிருத்தலால் “உலகு ஆதிபகவனை முதலாக உடையது” என உலகின்மேல் வைத்துக் **கடவுள் உண்டு** எனும் உண்மையினைப் புலப்படுத்தினார் திருவள்ளுவர். ஆயினும், தனக்கு முதல்வனாக ஆதிபகவனைத் தேர்ந்து கொள்ளும் உணர்வுரிமையும் உடைமைத் தன்மையும் உலகிற்கு இல்லை. ஆதலால் உயிர்க்கு முதல்வன் ஆதிபகவன் என்பதே இத்திருக்குறளின் கருத்தாகக் கொள்ளுதல் வேண்டும் என விளக்கங் கூறுவர் பரிமேலழகர்.

எழுத்துக்கள் உயிர், மெய் என இரு பகுதியனவாய் அகரத்தைத் தமக்கு முதலாகக் கொண்டு இருத்தல் போன்று உலகமும் **உணர்வுடைய**

**உயிர்கள், உணர்வில்லாத பொருள்கள்** என இருபகுதியை உடையதாய் ஆதி பகவனைத் தனக்கு முதலாக உடையது என்று அறிவுறுத்துவது திருக்குறளின் முதற்குறளாகும். உயிரெழுத்து ஆன்மாவுக்கும், மெய்யெழுத்து தத்துவப் பிரபஞ்சத்திற்கும், அகரம் ஆதிபகவனாகிய இறைவனுக்கும் உவமை.

மேலும், திருக்குறளில் முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்தில் ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தன், தனக்கு உவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான் என்பன கடவுளுக்குரிய திருப் பெயர்களாகக் குறிக்கப்பெற்றுள்ளன.

இவையனைத்தும் இறைவனை ஒருவனாகவே வைத்துக் கூறுதலாலும், மெய்யுணர்த்தல் என்னும் அதிகாரத்தில் முழுமுதற் கடவுளாகிய செம்பொருளை "ஓர்த்துள்ளம் உள்ளது உணரின்" என்ற தொடரில் "உள்ளது" என ஒருமை வாசகத்தால் குறிப்பிடுதலாலும், இறைவன் ஒருவனே என்பது தெய்வப்புலவர் கருத்தாதல் நன்கு தெளியப்படும்.

மாயையின் காரியமாகிய உலகம் அறிவில்லாத பொருளாதலாலும், உலகில் வாழும் மன்னுயிர்கள் ஆணவ இருளால் மறைக்கப்பெற்றுச் சிற்றறிவினை உடையன ஆதலாலும் இவ்விருவகைப் பொருளையும் ஒருங்கு இயக்குதற்கு இவற்றின் வேறாகிய முதற்கடவுள் ஒன்று உண்டு என்பது பெறப்படும்.

பெறப்படவே, காணப்படும் உலகம் வியக்கத்தக்க இயக்கம் உடையதாய்த் தொழிற்படுதலின் இவ்வுலகினை இயக்கும் முதற்கடவுள் அளவிலா ஆற்றலும், முற்றுணர்வும், பேரருளும் முதலியனவாக எண்ணப்படும் குணங்களுடையன் என்பதும் பெறப்பட்டது. எனவே, அத்தன்மையனாகிய முதற்கடவுள் ஒருவனே அமையும்; வேறு அத்தன்மைய பொருள் ஒன்று உண்டு எனக் கொள்வதற்குச் சிறிதும் இடம் இல்லை.

கடவுள் ஒருவரே என்னும் இவ்வுண்மையை திருமூல நாயனார், "ஒன்றவன் தானே", "ஒன்றேகுலம் ஒருவனே தேவனும்" எனவும், அறிவினாற் சிவனேயாகிய மணிவாசகப் பெருந்தகையாரும் "ஒருவன் என்னும் ஒருவன் காண்க", "சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம் ஒருவனே" எனவும் போற்றியுள்ளனர்.

திருமூலர் முதலிய திருமுறை ஆசிரியர்கள் கடவுள் ஒருவரே எனத் தெளிந்து உணர்த்தியது போலவே அவ்வருள் ஆசிரியர்களின்

வாய்மொழிகளை உளங்கொண்ட அருட்பிரகாச வள்ளலாரும் தாம் பாடிய திருச்சிற்றம்பலத் தெய்வமணிமாலையில் "திருச்சிற்றம்பலந் தனிலே தெய்வம் ஒன்றே கண்டீர்" எனத் தெளிவுபட அறிவுறுத்தியுள்ளமை இங்கு மனங்கொள்ளத் தகுவதாகும்.

இங்கு தெய்வம் ஒன்றே என்று வற்புறுத்திய பெருமானார் திருவிளங்க எனத் தொடங்கும் பாசுரத்தில் "அருளுதவு பெருந்தாயாம் மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க வயங்குமணிப் பொது விளங்க வளர்ந்த சிவக் கொழுந்தே" என இருமையில் வைத்துப் போற்றியது எவ்வாறு பொருந்தும் என்று சிலர் வினவுதல் கூடும். இவ்வினாவுக்கு விடையாக அமைந்தது 'ஒன்றுமலார் இரண்டுமலார் ஒன்றிரண்டுமானார்' என வரும் திருவருட்பாத் தொடராகும்.

"ஞாயிறு" என்னும் ஒருபொருளே உலகப் பொருளில் தோய்ந்து விளக்கு மிடத்துக் கதிர் என்னும் பெயரும், தன்னை விளக்குமிடத்துக் 'கதிரோன்' என்னும் பெயரும் இருதிறப்பட்டு இயைந்து நிற்குமாறு போல, பேரறிவாகிய முழுமுதற்பொருள் ஒன்றே உலகுயிர்களாகிய புறப்பொருளை நோக்கி நிற்கும் நிலையில் சத்தி என்னும் பெயரும், அறிவுமாத்திரமாய் நிற்கும் தன்னிலையில் சிவம் என்னும் பெயரும் பெற்று ஒருமைத் தன்மையின்கண் இருதிறப்பட்டு இயைந்து குணமும் குணியுமாய் (பண்பும் பண்புடைப் பொருளுமாய்)த் திகழ்தலால் அம்மையும் அப்பனுமாகிய அப்பெருமானை

"ஒன்றுமலார், இரண்டுமலார், ஒன்றிரண்டு மானார்"

என அருட்பிரகாச வள்ளலார் குறிப்பிட்டமை பொருத்தமுடையதே யாகும்.

இதுகாறும் எடுத்துக் காட்டிய அருளாளர்கள் வாய் மொழிகளாலும், அவை பற்றிய விளக்கங்களாலும் உலகுயிர்களை இயக்கியருளும் அம்மையப்பராகிய முழு முதற் கடவுள் ஒருவரே என்பது விளங்கும்.

**இங்கு நம் வள்ளல் பெருமானார் அந்த ஒருவரேயாகிய இறைவனை அருட்பெருஞ்ஜோதியர் எனப் பகருகின்றார்.**

'திருவையா றகலாத செம்பொற் சோதி' - அப்பர்

'சோதியே சுடரே சூழொளி விளக்கே'

'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி' - மாணிக்கவாசகர்

'சுத்த நிர்க்குணமான பரதெய்வமே பரஞ்சோதியே' - தாயுமானவர்

என முன்னைப் பெரியோர்களும் இறைவனை ஜோதி வடிவில் குறித்திருப்பினும் நம் பெருமானைப் போல் ஜோதி வடிவு ஒன்றை மட்டுமே முடிந்த முடிவாகக் கொண்டாரில்லை. பெருமானோ இறைவனைச் ஜோதிமயமாகவே கண்டார். பெருமானது முடிந்த முடிவான கொள்கை அருட்பெருஞ்ஜோதி வழிபாடே. அதற்கென அமைத்தருளியதே உத்தரஞான சிதம்பரமாகிய சத்தியஞான சபை. அதற்கெனப் பாடியருளியதே அருட்பெருஞ்ஜோதி அகவல்.

எனவே மனித தேகம் பெற்ற நாம் அனைவரும் நம் வள்ளல் பெருமானார் வகுத்தருளிய சுத்த சன்மார்க்க நெறிநின்று ஐயம், திரிபு, மயக்கம் இன்றி உண்மைக் கடவுளாகிய அருட்பெருஞ்ஜோதியை உண்மை அன்பால் வழிபட்டு நற்கதி அடைவோமாக!

**அருட்பெருஞ் ஜோதி அபயம் அபயம்**
**அருட்பெருஞ் ஜோதி அபயம் - அருட்பெருஞ்**
**ஜோதி அபயம்சிற் ஜோதி அபயம்பொற்**
**ஜோதி அபயம் துணை.**

**துணைவா அபயம் துயர்அகல என்பால்**
**அணைவா அபயம் அபயம் - பணைவாய்**
**வடலா அபயம் வரதா அபயம்**
**நடநாயகா அபயம் நான்.**

**திருச்சிற்றம்பலம்**

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அன்பு உள்ளங்களே! கடந்த 10 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.

இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் 8012680865**

# தானம்

அளவற்ற அருளும், நிகரற்ற அன்பும் உடையவனுமாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன் பூமியைப் படைத்தபோது, அது நிலையாக நிற்காமல் கொஞ்சம் அதிர்ந்து அசைந்தது. அப்போது உயிர்க்குலம் அனைத்தும் அச்சத்தில் ஆழ்ந்தன. தான் படைத்த பூமி அசைவதைப் பார்த்து இறைவன் அதன்மேல் பிரம்மாண்டமான மலைகளைப் பொருத்தினான். அதன்பின், பூமி அசைவற்று நிலையாக நின்றது.

மலைகளின் வலிமையைக் கண்டு வானவர்களின் விழிகள் வியப்பால் விரிந்தன. 'மலைகள்தான் உன்னுடைய படைப்பில் மிக்க வலிமை வாய்ந்தவையா?' என்று அவர்கள் அடிபணிந்து கேட்டனர். 'இல்லை! அந்த மலைகளை உடைத்துத் தகர்க்கும் கடினமான இரும்பை நான் படைத்திருக்கிறேன். பாறையைவிட என் படைப்பில் இரும்பு அதிக வலிமையானது' என்றான் இறைவன்.

'இரும்பை விடவும் வலிமையானது உன் படைப்பில் வேறொன்றும் இல்லையா?' என்று அவர்கள் மீண்டும் கேட்டதும், 'இருக்கிறது. இரும்பை உருக்கும் நெருப்பும் என் படைப்பே!' என்றான் இறைவன். 'நெருப்பினும் வன்மையானது உன் படைப்பில் உண்டோ?' என்று விடாமல் அவர்கள் வினா எழுப்ப, 'நெருப்பை அணைக்கும் நீரைப் படைத்திருக்கிறேன்' என்று புன்னகைத்தான்.

'நீரை விட ஆற்றல் மிக்கது அகிலத்தில் இல்லையா?' என்று வானவர்கள் வினவ, 'அந்த நீரைக் கிளர்ந்தெழச் செய்யும் காற்று இருக்கிறதே!' என்று வாய்விட்டுச் சிரித்தான் இறைவன்.

'அப்படியானால் உன் படைப்பில் எல்லாம் வல்லது காற்றுதானா?' என்று ஆர்வத்துடன் அவர்கள் கேள்விக்கணை தொடுத்ததும், மௌனத்தில் ஆழ்ந்த ஆண்டவன், சிறிது நேர இடைவெளிக்குப் பின், 'இடது கைக்குத் தெரியாமல், துயருற்றவனைத் தேடிச் சென்று எவனொருவன் வலது கையால் தானம் அளிக்கிறானோ, அந்த ஈர மனமுள்ள மனிதனே என் படைப்பில் எல்லாவற்றினும் வலிமை வாய்ந்தவன்' என்று சொல்லி, அமைதியானான்.

'அறம் செய விரும்பு' என்றார் ஔவை. ஒருவனிடம் செல்வம் அளவுக்கு மேல் சேர்ந்தால் அதை அடுத்தவர்க்கு வழங்க வேண்டும். தானும் அனுபவிக்காமல், ஏழை எளியவர்க்கும் அள்ளித் தராமல் பெட்டியில் வைத்துப் பூட்டி மகிழ்ந்தால், அச்செல்வம் 'நாய் பெற்ற தெங்கம் பழம்' என்கிறது பழமொழி நானூறு. தேங்காயை நாயால் உடைத்து உண்ணவும் முடியாது. அடுத்தவனை அது தின்னவும் விடாது.

*விசிட்டாத்துவைதத்தை போதித்த மகான் இராமானுஜர் ஊர்தோறும் சென்று மக்களுக்கு உபதேசம் செய்தார். ஒருநாள் நகரத்தை அடைந்தார். அவருடைய வரவு அறிந்து நகரின் எல்லையில் மக்கள் திரண்டு நின்று வரவேற்பளித்தனர். அந்த நகரத்தின் பெரும் செல்வந்தருக்கு அது வியப்பைத் தந்தது. மக்களின் மரியாதைக்குரிய மகான் தன் மாளிகைக்கு வந்தால் தன்னுடைய மதிப்பு மேலும் கூடும் என்று அவர் மனம் கணக்கிட்டது. அவரும் நகரின் எல்லையில் போய் நின்றார். இராமானுஜரை வற்புறுத்தி தன் மாளிகைக்கு வரவழைத்தார்.*

*அந்த நகரில் அதற்கு இணையாக மாளிகை வேறெதுவும் இல்லை. பார்க்குமிடமெங்கும் செல்வத்தின் செழுமை பளிச்சிட்டது. எத்தனை அறைகள் அந்த மாளிகையில் இருந்தன என்று எவரும் எண்ணிவிட முடியாது. ஒவ்வொரு அறைக்கு உள்ளும் குவிந்து கிடந்த விலை மதிப்புள்ள பொருள்களையெல்லாம் செல்வந்தர் பெருமிதத்துடன் காட்டினார். இறுதியில் ஆடம்பரமாக செல்வந்தர் திமிர் முகம் காட்டியதை இராமானுஜர் உணர்ந்தார். ஏழைகளின் வியர்வையில் கொழுந்திருக்கும் அந்த மனிதருக்குப் பாடம் புகட்ட முடிவு செய்தார்.*

*'நண்பரே! நீங்கள் எனக்கு ஓர் உதவி செய்ய முன்வந்தால் மகிழ்வேன்' என்றார் இராமானுஜர். 'நாடு போற்றும் மகான் நம்மிடம் உதவி கேட்கிறாரே' என்று பூரித்துப் போனார் செல்வந்தர். 'என்ன வேண்டும் சொல்லுங்கள். எதைக் கேட்டாலும் தருகிறேன்' என்று தன் இயல்பை மீறி வாக்களித்தார். இராமானுஜர் தன் பையில் நீண்ட நேரம் துழாவி, ஒரு ஊசியைத் தேடியெடுத்தார். 'நண்பரே! உடைமையைக் காப்பாற்றத் தெரியாத பரதேசி நான். என்னிடம் உள்ள சொத்து இந்த ஊசி ஒன்றுதான். இதை உங்கள் பொறுப்பில் தருகிறேன். பத்திரமாகப் பாதுகாத்து வாருங்கள். வைகுந்தத்தில் உங்களைச் சந்திக்கும்போது என்னிடம் இதை மறக்காமல் ஒப்படைத்தால் போதும்!' என்றார் இராமானுஜர்.*

*செல்வந்தரின் முகம் கோபத்தில் சிவந்தது. 'இவர் நம்மிடம் வேண்டுமென்றே விளையாடுகிறாரோ' என்ற சந்தேகம் எழுந்தது. 'வைகுந்தத்திற்கு இந்த ஊசியை எப்படி ஐயா கொண்டு வர முடியும்?' என்று சூடான குரலில் கேட்டார். புன்முறுவல் பூத்த இராமானுஜர், 'நண்பரே! செத்தபின்பு ஒரு சிறிய ஊசியைக்கூடக் கொண்டு செல்ல முடியாது என்ற உண்மையை உணர்ந்திருக்கும் நீங்கள், யாருக்கும் தராமல் இவ்வளவு செல்வத்தைச் சேர்த்து வைத்து எதைச் சாதிக்கப் போகிறீர்கள்? தனக்குப் போக மீதமுள்ளதை வறியவர்க்கு வழங்குவதுதான் செல்வர்களின் கடமை' என்று உபதேசித்தார்.*

*ஹோட்டிஸ் என்ற ஜென் ஞானி ஒருவர் இருந்தார். எப்போதும் கவலையற்றுச் சிரித்த முகத்துடன் அவர் காணப்பட்டதால் 'சிரிக்கும் புத்தர்' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டார். அவர் அணிந்திருந்த அங்கியில் நிறைய இனிப்புகளை வைத்திருப்பார். குழந்தைகளைப் பார்க்கும்போது சிரிக்கச் சிரிக்கப் பேசி இனிப்பு வழங்குவார். பெரியவர்கள் எதிர்ப்பட்டால், அவர்களிடம் கைநீட்டி, 'ஒரு காசு கொடு' என்பார். பார்ப்பவரிடம் பிச்சைக்குக் கையேந்துவது அவருடைய நோக்கமன்று. 'அடுத்தவனுக்குக் கொடுக்க நீ என்ன வைத்திருக்கிறாய்?' என்பதுதான் அவர் செய்கையில் பொதிந்திருக்கும் கேள்வி. 'உன்னிடம் உள்ளதைப் பிறருடன் பகிர்ந்துகொள்' என்பதுதான் 'ஒரு காசு கொடு' என்று கைநீட்டியதன் பொருள்.*

*அருணகிரிநாதர் ஒரு பாடலில், மனிதர்கள் செய்ய வேண்டிய முக்கியமான செயலை மிக அழகாக விளக்குகிறார். மரத்தின் நிழலில் பல மனிதர்கள் இளைப்பாறலாம். ஆனால், மனிதனின் நிழலில் யாரும் இளைப்பாற இயலாது. மரத்தினால் கிடைக்கும் பயன்கூட மனிதனால் சமூகத்துக்குக் கிடைப்பது இல்லை. இந்த நிலையற்ற அற்ப உடலைத் தாங்கி உலவும் மனிதன், அடுத்தவர்க்கு அன்பு சார்ந்து உதவுவதன் மூலமே தன் வாழ்க்கைக்கும், எடுத்த பிறப்புக்கும் ஓர் உண்மையான அர்த்தத்தை உருவாக்க முடியும்.*

*'வெய்யிற்கு ஒதுங்க உதவா உடம்பின் வெறுநிழல்போல் கையில் பொருளும் உதவாது' என்று சொல்லும் அருணகிரிநாதர், 'நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள்' என்று மனித சமூகத்திடம் மன்றாடுகிறார். அரிசியைத் தந்துதவும் நிலையில் இல்லாதவன் நொய்யைத் தந்தால் கூடப் போதும். அந்த நொய்யில் ஒரு பிளவளவுத் தந்தாலும் சம்மதமே! பிறரோடு தன்னுடையதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற உள்ளம் ஒருவனுக்கு இருக்க வேண்டும். அதுதான் முக்கியம்.*

*நம் வள்ளல் பெருமானாரின் பார்வையில் ஜீவகாருண்யமே ஆன்மநேயத்தின் அடித்தளம். அன்பும், உயிர் இரக்கமும்தான் சன்மார்க்கம். 'ஈரமும், அன்பும் கொண்டு இன்னருள் பெற்றேன்: என் மார்க்கம் இறவாத சன்மார்க்கம்' என்கிறார் வள்ளல்பெருமான். சக உயிர்களுக்கு இரங்கும் சன்மார்க்கத்தை வலியுறுத்திய பெருமானாரின் அன்பு இதயம் ஓரறிவு பெற்ற உயிரிலிருந்து ஆறறிவு பெற்ற மனிதன் வரை அனைத்து உயிர்களையும் தன்னுயிராய்ப் பாவித்து அவற்றின் துயர் துடைக்கத் துடித்தது.*

*'பசியினால் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும், எந்தச் சமயத்தாராயினும், எந்தச் சாதியாராயினும், எந்தச் செய்கையாராயினும் அவர்கள் தேச ஒழுக்கம், சமயம் ஒழுக்கம், சாதி ஒழுக்கம், செய்கை*

ஒழுக்கம் முதலானவற்றைப் பேதித்து விசாரியாமல், எல்லாச் சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாக விளங்குவதை அறிந்து, பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்துக்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யம்' என்று விளக்கி அருளுகின்றார் நம் பெருமானார்.

'நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில், படமாடும் கோயில் பரமர்க்கு அங்கு ஆமே' என்பது திருமூலரின் திருமந்திரத்தில் ஒரு மந்திரம். 'படங்களும் ஓவியங்களும் அமைந்த மாடங்களை உடைய கோயிலில் இருக்கும் இறைவனுக்கு நாம் ஒரு பொருளைக் காணிக்கை தந்தால் அது நடமாடும் கடவுள்களான ஏழைகளைப் போய்ச் சேராது. ஆனால், நடமாடும் ஏழையர்க்கு நாம் ஒன்று கொடுத்தால், அது படமாடும் கோயிலில் இருக்கும் இறைவனுக்கு நிச்சயம் போய்ச் சேரும்' என்பது திருமந்திரம்.

இவ்விதம் நம் ஞானிகள் அருளிய வாக்கின்படி தருமம் செய்து கருமம் நீங்கி ஆனந்தமாக வாழ்வோமாக!

திருச்சிற்றம்பலம்

## பாடலும் பொருளும்

நம் வள்ளல் பெருமானார் மனம், புத்தி, சித்தம், அகங்காரம், மாயை, மாமாயை, மூலப் பிரகிருதி, கன்மம், மூலமலம், திரோதானம் முதலிய தத்துவங்களையும் தூக்கம், பயம், கோபம், காமம், குரோதம், உலோபம் முதலிய தீய குணங்களையும் தம்மின் நீங்குமாறு வெருட்டுகின்றாராம்.

**திருவளர்பேர் அருளுடையான் சிற்சபையான் எல்லாம்**
**செய்யவல்ல தனித்தலைமைச் சித்தன்எல்லாம் உடையான்**
**உருவமுமாய் அருவமுமாய் உபயமுமாய் அலவாய்**
**ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி ஒருவனுண்டே அவன்றான்**
**பெருமையினால் எனையீன்றான் நான்ஒருவன் தானே**
**பிள்ளைஅவன் பிள்ளைஎனப் பெரியர்எலாம் அறிவார்**
**இருமையுறு தத்துவர்காள் என்னை அறியீரோ**
**ஈங்குமது துள்ளல்எலாம் ஏதும்நட வாதே. – தத்துவ வெற்றி (01)**

எல்லாச் செல்வங்களிலும் தலையாய செல்வமாதலின் இறைவனுடைய திருவருளைப் "பேரருள்" என்று புகழ்கின்றார். ஞானசபைத் தலைவன் ஆதலின் இறைவனை "சிற்சபையான்" என்று சிறப்பிக்கின்றார். சித்சபை என்பது சிற்சபை என வந்தது. வரம்பில் ஆற்றலும் எல்லாருடைய சிந்தையில் தங்குதலும் உடையவனாதலின், "எல்லாம் செய்ய வல்ல

*தனித் தலைமைச் சித்தன்" என்று புகழ்கின்றார். எல்லா உலகங்களையும் தனக்கு உடைமையாகவும் எல்லா உயிர்களையும் தனக்கு அடிமையாகவும் உடையவனாதலால், "எல்லாம் உடையான்" என்று போற்றுகின்றார். உருவம் நான்கும் அருவம் நான்கும் உருவருவம் ஒன்றும் ஆக ஒன்பது உருவ பேதங்கள் உடையவனாயும், எவ்வகை உருவமும் இல்லாதவனாயும் இருத்தல் அவனுக்கு இயல்பாதலின், "உருவமுமாய் அருவமுமாய் உபயமுமாய் அல்லவாய் ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி" என்று உரைக்கின்றார். இருள் நீக்கி அருள் ஞானப் பேரொளியைத் தருவதுகொண்டு, "ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி" என்று புகல்கின்றார். இறைவன் என்ற பொருள் வகையில் அவன் ஒருவன் தவிர வேறு பொருள் இல்லை என்பதுபட, "ஒருவன் உண்டே" என்று ஓதுகின்றார். அவ்வொருவனுக்கும் தனக்குமுள்ள முறைமையைப் புலப்படுத்தற்கு, "அவன்தான் பெருமையினால் என்னை ஈன்றான்; நான் ஒருவனே பிள்ளை" என்று இயம்புகின்றார். எனக்கும் அவனுக்கும் உள்ள இந்த முறைமை உலகத்து ஞானிகள் அனைவரும் நன்கு அறிந்தது என்பாராய், "அவன் பிள்ளை என பெரியரெலாம் அறிவார்" என்று கூறுகின்றார். நன்மை தீமை இரண்டையும் செய்யும் தத்துவங்களே! நீங்கள், நான் அவன் பிள்ளை என்பதை அறியீர்களா? என்பதை, 'இருமையுறு தத்துவர்காள் என்னை அறியீரோ, ஈங்கு உமது துள்ளல் எலாம் ஏதும் நடவாது" என்று உரைக்கின்றார். துள்ளல் - ஆரவாரம். நடவாது என்பது செல்லாது.*

திருவிளங்கும் பேரருள் உடையவனும், ஞானசபைத் தலைவனும், எல்லாம் செய்ய வல்ல ஒப்பற்ற தலைமைச் சித்தனும் எல்லாவற்றையும் உடையவனும், உருவமாகவும் அருவமாகவும் அருவுருவமாகவும் இவை மூன்றும் அல்லதாகவும் ஓங்குகின்ற அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனுமாகிய ஒருவன் உண்டென்றும்; அப்பெருமான் தான் தன்னுடைய பெருமைக்கு ஏற்ப என்னைப் பெற்றவனென்றும்; நான் ஒருவனே அவனுடைய பிள்ளை என்பதைப் பெரிய ஞானிகள் எல்லாரும் அறிவர்; மாறுபட்ட தத்துவங்களே என்னை நீவிர் அறியீர் போலும்; இனி உங்களுடைய துள்ளலெல்லாம் என்னிடம் சிறிதும் செல்லாது காண்மின் என்பது இப்பாடலின் பொருள்.

**பன்முகஞ்சேர் மனம்எனும்ஓர் பரியாசப் பயலே**
**பதையாதே சிதையாதே பார்க்கும்இடம் எல்லாம்**
**கொன்முகங்கொண் டடிக்கடிபோய்க் குதியாதே எனது**
**குறிப்பின்வழி நின்றிடுநின் குதிப்புநட வாது**

**என்முனம்ஓர் புன்முனைமேல் இருந்தபனித் துளிநீ**
**இம்மெனும்முன் அடக்கிடுவேன் என்னை அறியாயோ**
**பின்முன்என நினையேல்காண் சிற்சபையில் நடிக்கும்**
**பெரியதனித் தலைவனுக்குப் பெரியபிள்ளை நானே.**

*பன்முகம் - பலவேறு வகை; பலவேறு உருவமுமாம். கண்டார் பரிகசிக்கத் தக்க தோற்றமும் செயலும் உடைய சிறுவனைப் "பரியாசப் பயல்" என்பது உலக வழக்கு. பதறுதல் - துடித்தல். சிதைதல் - கெடுதல். கொன்முகம் - அச்சம் பயக்கும் தோற்றம்; பயனில்லாத தோற்றம் எனும் அமையும் குறிப்பு - கருத்து. மனத்தினது புன்மை புலப்படுத்தற்கு, "என் முனம் ஓர் புல் முனை மேல் இருந்த பனித்துளி நீ" என்று இகழ்கின்றார். பின்னர் அடங்குவோம் முன்னே முயலுவோம் என்றெல்லாம் எண்ணிக் கெடுதல் வேண்டாம் என அறிவுறுத்தற்கு, "பின்முன் நினையேல் காண்" என அருளுகின்றார்.*

*"பலவேறு வகையில் உருக் கொண்டு மயக்கவல்ல மனம் எனப்படும் கண்டோர் பரிகசித்தற்குரிய சிறுவனே; பதற்றமுற்று உன் தன்மையைக் கெடுத்துக் கொள்ளாதே; பார்க்குமிடமெங்கும் அச்சம் தோன்றுமாறு அடிக்கடி போய்க் குதித்து ஆடுவதைக் கைவிடுக; என் கருத்தின்படி நிற்பாயாக; உன்னுடைய துள்ளலும் துடிப்பும் என்னிடம் செல்லாது; என் எதிரில் நீ ஒரு புல் நுனியில் தங்கும் சிறு பனித்துளியாவாய்; இம் என்னும் முன் உம்மை அடக்கி ஒடுக்கி விடுவேன்; என்னுடைய ஆற்றலை நீ அறியாய்; மேலும் முன்னே முயலுவோம் பின்பு அடங்குவோம் என்று நினைக்க வேண்டாம்; ஞானசபையில் திருக்கூத்தாடும் பெரிய ஒப்பற்ற தலைவனாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் பிள்ளைகளில் நான் ஆற்றலால் பெரியவனாகிய பிள்ளை என அறிவாயாக" என்பது இப்பாடலின் பொருள்.*

**திருச்சிற்றம்பலம்**

---

**திருவண்ணாமலையில் திருக்கார்த்திகை தீபத் திருநாளன்று திருஅருட்பா புத்தகம் இலவசமாக வழங்க உங்கள் பங்களிப்பை எங்களுக்குத் தாருங்கள்**

திருக்கார்த்திகை தீபத்தன்று கிரிவலம் வரும் பக்தர்களுக்கு வள்ளல் பெருமான் வகுத்தருளிய ஜீவகாருண்ய ஒழுக்கம், புலால் மறுத்தல், பாவபுண்ணிய விளக்கம் போன்ற வாழ்வியல் நெறிகளை சிறிய புத்தகமாக அச்சிட்டு வழங்க திட்டமிட்டுள்ளோம்.

**ஒரு புத்தகம் அச்சிட ஆகும் செலவு ரூ. 2/– மட்டுமே!!!**

இந்த ஞான தானத்திற்கு தங்களால் இயன்ற உதவியை செய்யுங்கள்.

இந்த புத்தகம் தமிழகம் முழுவதும் நடைபெறும் சன்மார்க்க நிகழ்வுகளிலும், நம் சங்கத்தின் மூலம் நடத்தப்படும் சன்மார்க்க வகுப்புகளிலும் இலவசமாக தரப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. *வங்கிக் கணக்கிற்கு பக்கம் எண் 26ஐ பார்க்கவும்.*

# யார் குரு?

– திரு வாரியார் சுவாமிகளின் சொற்பொழிவிலிருந்து

*அன்பர்களே!*

*“குரங்கு சாவதற்கு ஒரே ஒரு புண்போதும், முட்டாள் சாவதற்கு ஒரே ஒரு பிரச்சினை போதும்” என்று கிராமத்தில் ஒரு உவமான வாக்கியம் உண்டு.*

*காடுகளில் வாழும் குரங்குகள் பெரும்பாலும் நோய் வாய்ப்படுவதில்லை. ஆனால் அவைகளுக்கு ஒரே ஒரு புண் வந்துவிட்டால் போதும். அதை நோண்டி நோண்டித் பெரிதாக்கித் தன்னை அழித்துக் கொள்ளும்.*

*அதுபோலத்தான் மனித வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை மனதிற்குள் போட்டு நோண்டி நோண்டி அதைப் பெரிதாக்கிக் கொள்வதற்கு ஒப்பாகும்.*

*அந்தக் குரங்கு கொஞ்சம் பொறுமையாய் புண்ணை நோண்டாமல் இருந்தாலே போதும், புண் விரைவில் ஆறிவிடும்.*

*இதை குரங்குக்குச் சொன்னாலும் புரியாது. அது புண்ணை நோண்டுவதை நிறுத்தப்போவதில்லை.*

*ஆனால், மனிதன் புரிந்து கொள்ள முடியும்தானே?*

*மனித வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை மனதிற்குள் போட்டு நோண்டி நோண்டி அதைப் பெரிதாக்கிக் கொள்ளாமல் வாழமுடியும் தானே?*

*இந்த புரிதல் எப்போதும் இயற்கையில் எதிர்பாராத தருணங்களில் நடந்து கொண்டேதான் இருக்கிறது.*

*இதில் புரிந்து கொள்பவர்கள் எல்லோருமே சீடர்கள். புரிய வைப்பவை எல்லாமே குரு. இந்த மொத்த நிகழ்வும் “ஆன்மிகம்” எனப்படுகிறது, அவ்வளவுதான்.*

*தத்தாத்ரேயர் மிக மகிழ்ச்சியாக இருந்ததைக் கண்ட அரசன், அவரது மகிழ்ச்சிக்கான காரணத்தையும், அவரது குரு யார்? என்பதையும் கேட்டான்.*

*‘எனக்கு 24 குருமார்கள் இருக்கின்றனர்’ என்றார் தத்தாத்ரேயர்.*

*இந்தப் பதிலைக் கேட்டு ஆச்சரியப்பட்ட அரசன், “சுவாமி! ஒருவருக்கு ஒரு குரு தானே இருக்க முடியும்? தங்கள் பதில் வித்தியாசமாக உள்ளதே” என்றான்.*

அவனிடம், "பஞ்சபூதங்களான ஆகாயம், நீர், நிலம், நெருப்பு, காற்று அவைகளை தவிர சூரியன், சந்திரன், புறா, மலைப்பாம்பு, கடல், விட்டில்பூச்சி, வண்டு, தேனீ, குளவி, சிலந்தி, யானை, மான், மீன், பருந்து, பாம்பு ஆகியவைகளையும் சேர்த்து நாட்டியக்காரி பிங்களா, ஒரு குழந்தை, ஒரு பணிப்பெண், அம்பு தயாரிப்பவன் யாவரும் என் குருமார்கள் ஆவர்" என்றார் தத்தாத்ரேயர்.

மன்னன் ஏதும் புரியாமல் நின்றதைக் கண்ட தத்தாத்ரேயர் இதற்கு விளக்கமளித்தார்.

மன்னா! பொறுமையை பூமியிடம் கற்றேன்; தூய்மையை தண்ணிரிடம் தெரிந்து கொண்டேன்.

பலருடன் பழகினாலும் பட்டும் படாமல் இருக்க வேண்டும் என்பதைக் காற்றிடம் படித்தேன்.

எதிலும் பிரகாசிக்க வேண்டும் என்பதை தீ உணர்த்தியது.

பரந்து விரிந்த எல்லையற்ற மனம் வேண்டும் என்பதை ஆகாயம் தெரிவித்தது.

ஒரே சூரியன் இருந்தாலும் பல குடங்களில் உள்ள தண்ணீரில் அதன் பிம்பம் பிரதிபலிப்பது போல மெய்ப்பொருள் ஒன்றாக இருந்தாலும் மனம் பலவாறாக சிந்திப்பதை உணர்ந்தேன்.

வேடன் ஒருவன் புறாக்குஞ்சுகளைப் பிடித்தான். அவற்றின் மீது அன்பு கொண்ட தாய்ப்புறா தானும் வலியச் சென்று வலையில் சிக்கியது. இதில் இருந்து பாசமே துன்பத்திற்கு காரணம் என்பதை உணர்ந்தேன்.

எங்கும் அலையாமல் தன்னைத் தேடி வரும் உணவைப் பிடித்துக் கொள்வது போல, கிடைப்பதை உண்டு பிழைக்க வேண்டும் என்பதை மலைப்பாம்பிடம் கற்றேன்.

பல்லாயிரம் நதிகளை ஏற்றுக்கொள்ளும் கடல் போல, எவ்வளவு துன்பம் வந்தாலும் ஏற்கும் பக்குவத்தை கடலிடம் படித்தேன்.

பார்வையை சிதற விடாமல் ஒரே இடத்தில் மனதை செலுத்துவதை விட்டில் பூச்சி கற்றுத் தந்தது.

எல்லாவற்றையும் மறந்து மகிழ்ச்சியாயிருப்பதை தாயிடம் பால் குடிக்கும் குழந்தையிடம் கற்றேன்.

பணிப்பெண் ஒருத்தி அரிசி புடைக்கும்போது அவளது வளையல்கள் உரசி ஒலி எழுப்பின, இரண்டு வளையல்களில் ஒன்றை அவள் கழற்றியதும் ஒலி அடங்கியது. இதில் இருந்து இரண்டு பேர் இருந்தால் தேவையற்ற விவாதம் ஏற்படும் என்பதைப் புரிந்து கொண்டு, தனிமையே சிறந்ததென்ற முடிவுக்கு வந்தேன்.

மரத்தில் கட்டி வைத்திருந்த பெண் யானையின் மீது ஆசை கொண்டு குழியில் விழுந்த ஆண் யானையைக் கண்டு பெண்ணாசையும் துன்பத்துக்கு காரணம் என்பதை உணர்ந்தேன்" என்று ஒவ்வொரு பொருளுக்கும் விளக்கமளித்தார்.

இதைக் கேட்ட அரசன், பூரண அமைதி அடைந்தான்.

தத்தாத்ரேயர் இயற்கையிடம் கற்ற இந்த உயர்ந்த பாடம் நம் எல்லாருக்குமே பொருந்தும் தானே.

**நல்ல சீடனுக்கு எல்லாமே குருதான்.**

திருச்சிற்றம்பலம்

# மூத்தோர்சொல் அமிர்தம்

முன்னொரு காலத்தில் மகிழ நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். கலையழகுப் பொருட்களைச் சேர்ப்பதில் அவன் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தான்.

பழங்காலத்தைச் சேர்ந்த விலை உயர்ந்த இருபது ஜாடிகள் அவனிடம் இருந்தன. அந்தச் ஜாடிகள் அரண்மனை அறை ஒன்றில் பாதுகாப்பாக இருந்தன.

மாதத்திற்கு ஒருமுறை பணியாளன் ஒருவன் அந்த அறைக் கதவைத் திறப்பான். அரசன் முன்னிலையில் அந்தச் ஜாடிகளை நன்றாகத் துடைத்து வைப்பான்.

அன்றும் வழக்கம் போல அவன் ஜாடிகளைத் துடைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஜாடி ஒன்று தவறிக் கீழே விழுந்து பல துண்டுகளாக உடைந்தது.

இதைப் பார்த்த அரசன் கோபத்தால் துடித்தான். "கிடைத்தற்கு அரிய ஜாடியை உடைத்து விட்டாயே. இந்தக் குற்றத்திற்கு உனக்கு மரண தண்டனை விதிக்கிறேன். நாளை நீ தூக்கிலிடப்படுவாய்" என்று கோபத்தில் ஆணையிட்டான்.

நடுங்கிய அவன் "அரசே! என்னை மன்னியுங்கள். இனிமேல் இத்தகைய தவறு செய்ய மாட்டேன்" என்று கெஞ்சினான்.

இரக்கம் காட்டாத அரசன் "நாளை நீ சாகத்தான் போகிறாய்" என்றான்.

இந்தச் செய்தி எங்கும் பரவியது. எல்லோரும் அந்தப் பணியாளனுக்காக இரக்கப்பட்டார்கள்.

மறுநாள் பொழுது விடிந்தது. முதியவர் ஒருவர் கையில் கோல் ஊன்றியபடி அரண்மனைக்கு வந்தார்.

*அரசனை வணங்கிய அவர் "அரசே! விலை உயர்ந்த ஜாடி உடைந்து விட்டதே என்று வருந்த வேண்டாம். அந்தச் ஜாடியை முன்பு இருந்தது போல என்னால் ஒட்ட வைக்க முடியும். ஒட்ட வைத்த ஜாடி என்றால் யாரும் நம்ப மாட்டார்கள்" என்றார்.*

*"நீர் சொல்வது உண்மையா?" என்று வியப்புடன் கேட்டான் அரசன்.*

*"என் திறமையை நீங்கள் நேரில் பார்த்தால் நம்புவீர்கள்" என்றார் அவர். ஜாடிகள் இருந்த அறைக்கு அவரை அழைத்துச் சென்றான் அரசன்.*

*அங்கே இருந்த பத்தொன்பது ஜாடிகளையும் உடைந்து கிடந்த ஜாடியையும் பார்த்தார் அவர். கையிலிருந்த தடியால் எல்லாச் ஜாடிகளையும் அடித்து நொறுக்கினார்.*

*இதைப் பார்த்த அரசன் கோபத்தின் உச்சத்திற்கே சென்றான்.*

*"என் உயிரினும் மேலான ஜாடிகளை உடைத்து விட்டாயே. உமக்கு என்ன தண்டனை தெரியுமா?" என்று கண்களில் தீப்பொறி பறக்கக் கத்தினான்.*

*அதற்கு அவர் "என் உயிர் போகும். அவ்வளவுதானே. நான் இவற்றை உடைக்கா விட்டால் ஒவ்வொரு ஜாடியும் ஒரு உயிரைப் பறிக்குமே. பலரின் உயிரைக் காப்பாற்ற என் உயிரை மகிழ்ச்சியுடன் தருகிறேன்" என்றார்.*

*உயிரை இழக்கத் துணிந்த அவர் தியாகம் அரசனின் உள்ளத்தைத் தொட்டது. அவன் கோபம் மறைந்தது.*

*அவரை வணங்கிய அரசன் "உங்களால் நல்லறிவு பெற்றேன். மனித உயிர் எல்லாவற்றிலும் மேலானது என்பதை அறிந்து கொண்டேன்.*

*இனி இப்படி நடந்து கொள்ள மாட்டேன். பணியாளனுக்கு விதித்த மரண தண்டனையை விலக்கிக் கொள்கிறேன்" என்று பணிந்தான்.*

**பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே**
**வீரமொடு காக்க விரைக்குவர் நேரிழாய்**
**மேல்சென்று தாங்கும் வியன்கோல் அடிதன்மேற்**
**கைசென்று தாங்குங் கடிது**

*உடலைத் தாக்க வருகின்ற கோலினைக் கையானது தடுத்து அந்த அடியைத் தான் தாங்கிக் கொண்டு உடலைக் காப்பாற்றும். அது போலச் சான்றோர் பிறர் துன்பங்களைத் தாங்கள் ஏற்றுக் கொண்டு அவர்களுக்குத் துன்பம் வராமல் காப்பாற்றுவர்.*

அரண்மனையை ஒட்டி வசித்த பிச்சைக்காரன் ஒருவன், அந்த அரண்மனைக் கதவில் ஒட்டப்பட்டிருந்த அறிவிப்பைக் கண்டான். அதில், மன்னர் விருந்தளிக்கப் போவதாகவும், அரச உடை அணிந்து வருவோர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்றும் குறித்திருந்தது.

பிச்சைக்காரன், தான் அணிந்திருந்த கந்தல் உடைகளை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டான். நிச்சயமாக அரசரும், அவருடைய குடும்பத்தினரும் மட்டுமே ராஜ உடை உடுத்தியிருக்க முடியும் என எண்ணினான்.

திடீரென அவனுக்குள் ஒர் எண்ணம். அந்த மாதிரி எண்ணுகிற அளவுக்குத் தனக்குள் ஏற்பட்ட துணிச்சலைப் பற்றி யோசித்த போதே, அவனுக்குள் நடுக்கும் ஏற்பட்டது. இருந்தாலும், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, அரண்மனை வாசலை அடைந்தான்.

வாயிற்காவலனிடம், “அரசரைப் பார்க்க வேண்டும்” என்றான். அந்த காவலன், அரசரிடம் அனுமதி வாங்கி வந்தான். உள்ளே வந்த பிச்சைக்காரனிடம், “என்னைப் பார்க்கவேண்டும் என்றாயாமே?” என்றார் அரசர். “ஆமாம்! நீங்கள் அளிக்கும் விருந்தில் கலந்துகொள்ள எனக்கு ஆசை. ஆனால், என்னிடம் ராஜ உடைகள் இல்லை. என்னை அதிகப்பிரசங்கி என நினைக்காவிட்டால், உங்களது பழைய ஆடையில் ஒன்றை அளித்து உதவினால், அதனை அணிந்துகொண்டு விருந்துக்கு வருவேன்” என்றான் மிகவும் பணிவாக.

அதே நேரம், மன்னர் என்ன சொல்வாரோ என நடுங்கியபடி, அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் மன்னர், அவனுக்கு ராஜ உடை ஒன்றை வழங்கினார். அந்த உடையை உடுத்தியவன், கண்ணாடி முன் நின்று கவனித்தான்; தோற்றத்தில் கம்பீரம் மிளிர்வதைக் கண்டு வியந்தான்!

அப்போது மன்னர் அவனிடம், “விருந்தில் கலந்து கொள்வதற்குத் தகுதி உடையவனாகி விட்டாய். அதைவிட, முக்கியமான ஒன்று. இனி உனக்கு வேறெந்த உடையும் தேவைப் படாது. உன் ஆயுள் முழுவதும் இந்த உடை அப்படியே இருக்கும். துவைக்கவோ தூய்மைப் படுத்தவோ அவசியம் இருக்காது” என்றார். கண்ணீர்மல்க, மன்னருக்கு நன்றி கூறி கிளம்ப எத்தனித்தவன், மூலையில் கிடந்த தனது பழைய ஆடைகளைக் கவனித்தான். அவனது மனம் சற்றே சலனப்பட்டது. “ஒருவேளை, அரசர் கூறியது தவறாக இருந்து, இந்த உடைகள் கிழிந்துவிட்டால் அப்போது நமக்குப் பழைய உடைகள் தேவைப்படுமே?!” என யோசித்தவன், சட்டெனச் சென்று தன் பழைய உடைகளை வாரிக்கொண்டான்.

*வீடு வாசல் இல்லாத அவனால் பழைய துணிகளை எங்கேயும் வைக்க முடியவில்லை; எங்கே போனாலும் பழைய ஆடைகளையும் சுமந்தே திரிந்தான். மன்னர் அளித்த இரவு விருந்தையும் அவனால் மகிழ்ச்சியாக ஏற்க முடியவில்லை. அடிக்கடி கீழே விழுந்துவிடும் பழைய துணிகளைச் சேகரிக்கும் மும்முரத்தில், பரிமாறப்பட்ட பதார்த்தங்களைச் சரிவர ருசிக்க முடியவில்லை. அரசர் சொன்னது உண்மை என்பது நாளடைவில் அவனுக்குப் புரிந்தது.*

*அவர் கொடுத்த ஆடை அழுக்காகவோ, கிழியவோ இல்லை. ஆனாலும், அந்த யாசகனுக்குப் பழைய உடைகள் மீது நாளுக்கு நாள் பிடிப்பு அதிகமானது. மக்களும் அவனது ராஜ உடையைக் கவனிக்காமல், அந்த கந்தல் மூட்டையையே பார்த்தனர். அவனைக் "கந்தல் பொதி கிழவன்" என்றே அழைத்தனர். இறக்கும் தருணத்தில் இருந்த அவனைப் பார்க்க, அரசர் வந்தார். அவனது தலைமாட்டில் இருந்த கந்தல் மூட்டையைப் பார்த்து அரசரின் முகம் சோகமாவதைக் கண்டான்.*

*முன்னரே அரசர் சொன்ன செய்தி நினைவுக்கு வந்தது. பழைய துணி மூட்டை, அவனது வாழ்நாளின் மொத்த மகிழ்ச்சியையுமே பறித்து விட்டது. அந்த யாசகனிடம் மட்டுமல்ல, நம் எல்லோரிடமும் அப்படியொரு மூட்டை இருக்கிறது.*

*அதனுள் விரோதம், கோபம், கவலை, சோகம், பகைமை எனப் பல பெயர்களில் வேண்டாத பொருட்கள் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாப்பதிலேயே கவனம் செலுத்துவதால், நமது வாழ்வில் வீசுகின்ற மகிழ்ச்சித் தென்றலை நுகர முடியாமல் இருக்கிறோம். நம்முடைய தீராத கோபம், எத்தனை இன்பம் வந்தாலும், அதை ஏற்றுக் கொண்டு ஆனந்தப்பட முடியாமல் செய்துவிடுகிறது. அரண்மனைகளில்கூட, இன்றும் பலர் பிச்சைக்காரர்களாகவே வாழ்கின்றனர். அனாதை ஆஸ்ரமங்களில் அரசர்களாக வாழ்வோரும் உண்டு.*

*மனதில் இருக்கிறது மகிழ்ச்சி. வாழ்க்கை தினமும் நமக்கு புதுத் துணிகளை நெய்து தருகிறது. நமக்கோ, பழைய துணிகளில் ஒரு நூலைத் தூக்கி எறியவும் மனமில்லை. நம் வீடுகளில், என்றோ வாங்கிய பல பொருள்கள் நிரம்பி இருக்கின்றன. அவற்றால் எந்தப் பயனும் இல்லாவிட்டாலும், தூக்கி எறிய மனமில்லை. வீடையே குடோனுக்கு இணையாக மாற்றிக் குடித்தனம் நடத்துபவர்களும் இருக்கின்றனர்.*

*இல்லத்தை மட்டுமல்ல, உள்ளத்தையும் குடோனாக்கி பழைய சரக்குகளைப் பத்திரப்படுத்தினால், அவற்றின் அழுகல் நாற்றம் உதடுகளின் வழியே சொற்களாகவும் கரங்களின் வழியே செயல்களாகவும் வெளிப்பட்டு வேதனையையே விநியோகிக்கும்; வெளிச்சத்தை வழங்காது.*

# திருஅருட்பா

*"இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரைக்கும் இருந்ததுபோல் இனியும் வீண்காலம் கழித்துக் கொண்டிராதீர்கள். இதுமுதல் சாலைக்கு ஆண்டவர் போகின்ற பத்துத் தினமாகிய கொஞ்சக்காலம் வரையில் நல்ல விசாரணையில் இருங்கள். இவ்விசாரணை முகத்திலிருந்தால் நமது ஆன்ம அறிவை விளக்கமின்றி மூடிக்கொண்டிருக்கின்ற அனந்தத் திரைகளில் அழுத்தமாயிருக்கின்ற முதல் திரையாகிய பச்சைத்திரை முதலில் நீங்கிவிடும். அது நீங்கினால் மற்ற திரைகள் அதிக விரைவில் நீங்கிப்போய்விடும். யோகிகள் வனம், மலை, முழை முதலியவற்றிற்குப் போய் நூறு ஆயிரம் வருஷகாலம் தவம் செய்து இவ்வுஷ்ணத்தை உண்டுபண்ணிக் கொள்கிறார்கள். இப்படி தவம் செய்து உஷ்ணத்தை உண்டுபண்ணிக் கொள்கிறதைப் பார்க்கிலும் தெய்வத்தை ஸ்தோத்திரம் செய்கின்றதிலும், நினைக்கின்றதிலும் இதை விடக் கோடிப்பங்கு, பத்து கோடிப் பங்கு அதிகமாக உஷ்ணம் உண்டுபண்ணிக் கொள்ளலாம்" என்பது நம் வள்ளல் பெருமானின் அருள் வார்த்தை. அதற்கிணங்க நாம் தோத்திரம் செய்ய இங்கே ஓரிரு திருஅருட்பா பாக்கள் இங்கே தரப்பட்டுள்ளது. இதனை உணர்ந்து ஓதி உய்வடைவோமாக!*

**நானோர் எளிமை அடிமை என்றோ நல்லன் அல்லனென்று**
**தானோநின் அன்பர் தகாதென்பர் ஈதென்று தானினைத்தோ**
**ஏனோநின் உள்ளம் இரங்கிலை இன்னும் இரங்கிலையேல்**
**கானோடுவேன் கொல்கடல் விழுவேன் கொல்முக் கண்ணவனே. 1**

**அருளறியாச் சிறுதேவரும் தம்மை அடுத்தவர்கட்கு**
**இருளறியா விளக்கு என்றாலும் நெஞ்சம் இரங்குகின்றார்**
**மருளறியாப் பெருந் தேவேநின் தன்னடி வந்தடுத்தேன்**
**தெருளறியாச் சிறியேன் ஆயினும் செய்க சீரருளே. 2**

**ஊன்பெறும் உயிரும் உணர்ச்சியும் அன்பும்**
**ஊக்கமும் உண்மையும் என்னைத்**
**தான்பெறு தாயும் தந்தையும் குருவும்**
**தனிப்பெருந் தெய்வமும் தவமும்**
**வான்பெறு பொருளும் வாழ்வும் நற்றுணையும்**
**மக்களும் மனைவியும் உறவும்**
**நான்பெறு நண்பும் யாவும் நீயென்றே**
**நம்பினேன் கைவிடேல் எனையே. 3**

## அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**உளத்தினுங் கண்ணினும் உயிரினும் எனது 1037**
**குளத்தினும் நிரம்பிய குருசிவ பதியே 1038**

| | | |
|---|---|---|
| உளத்தினும் | - | என்னுடைய உள்ளத்திலும் |
| கண்ணினும் | - | என்னுடைய கண்களிலும் |
| உயிரினும் | - | என்னுடைய உயிரிலும் |
| எனது குளத்தினும் | - | என்னுடைய நெற்றியிலும் (புருவமத்தியிலும்) |
| நிரம்பிய | - | நிறைந்தருளிய |
| குருசிவபதியே | - | குருவாகிய சிவபதியாம் அருட்பெருஞ்ஜோதியே! |

உள்ளம், உயிர், கண்(கண்கள்), புருவமத்தி ஆகிய நான்கு இடங்களிலும் குருசிவபதியின் திருவருள் நிரம்பியதாகப் பெருமான் கூறியருளுகின்றார்.

இதற்குச் சரியான எடுத்துக்காட்டாகத் திருமந்திரத்தில் ஒரு மந்திரம் உண்டு.

**இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்**
**பதிவித்த பாதப் பராபரன் நந்தி**
**கதிவைத்த வாறும் மெய்காட் டியவாறும்**
**விதவைத்த வாறும் விளம்பவொண் ணாதே**

என்பது அது. "இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும் பதிவித்த பாதப் பராபரன் நந்தி" என, இதயம் (உள்ளம்), நாட்டம் (கண்கள்) சிரம் (தலை உச்சி) ஆகிய மூன்று இடங்களிலும் இறைவனாம் நந்தி தன் பாதங்களைப் பதிவித்ததாகத் திருமூலர் கூறுகிறார். உள்ளத்திலும் உயிரிலும் திருவருள் பதிதல் ஞானநூல்களில் பலவிடங்களில் கூறப்பெறுகிறது. சிரத்தில் பதிவது திருவடிதீக்கை. இதுவும் பல இடங்களில் கூறப்பெறுவது. புருவமத்தியில் பதிவதும் கண்களிற் பதிவதும் அரிதாக் கூறப்பெறுவன.

கண்ணிற் பதிவதை திருமூலர் கூறுகின்றார். வள்ளற் பெருமானும் கூறுகின்றார்.

"இதயத்தும் நாட்டத்தும்" என்பது திருமூலர் திருமந்திரம்.

"உளத்தினும் கண்ணினும்" என்பது வள்ளலார் திருவருட்பா.

கண்களில் திருவருள் பதிதல் என்பது அரிய பெரிய ஓர் அருளனுபவம். திருவாசகத்திலும் இவ்வனுபவம் ஓரிடத்துக் குறிப்பிடப்பெறுகிறது. "உடல் புகுந்தான், உயிர் கலந்தான், உளம் பிரியான்" என்றும் "என்

*உடலும், எனது உயிரும் புகுந்து ஒழியா வண்ணம் நின்றந்தான்" என்றும் கூறப்பெறும் அதே கருத்து "உயிருண்ணிப்பத்து" என்ற பதிகத்தில் "மனத்தான் கண்ணின் அகத்தான் மறுமாற்றத் திடையானே" என்று கூறப்பெறுகிறது.*

*கண்ணகத்து அனுபவம் திருமூலர், மாணிக்கவாசகர், வள்ளலார் ஆகிய முப்பெருஞானியராலும் கூறப்பெறுகிறது. திருமந்திரம், திருவாசகம், திருவருட்பா ஆகிய முப்பெரு ஞானநூல்களாலும் கூறப்பெறுகிறது.*

**கண்ணிற் கலந்தருள் ஜோதி – உளக்**
**கண், உயிர்க்கண், அருட்கண்ணுமாம் ஜோதி – 4577**

*என்று வள்ளற்பெருமான் மேலும் பாடுகின்றார். கண்ணில் கலந்தருள் ஜோதி என்றவர், உளக்கண், உயிர்க்கண், அருட்கண் என்று மேலும் மூன்று கண்களையும் குறிப்பிடுகின்றார்.*

**கண்ணிற் கலந்தான், கருத்திற் கலந்தான், என்**
**எண்ணிற் கலந்தே இருக்கின்றான், – பண்ணிற்**
**கலந்தான், என் பாட்டில் கலந்தான், உயிரில்**
**கலந்தான், கருணை கலந்து – 5487**

*என்பதும் வள்ளற்பெருமான் வாக்கு.*

*கண்ணிலும், கருத்திலும், எண்ணும் உள்ளத்திலும், பண்ணிலும், பாட்டிலும், உயிரிலும் கலந்த இறைவன் எப்படிக் கலந்தான்? கருணை கலந்து கலந்தான்! "கருணை கலந்து" என்பதை ஒவ்வொன்றோடும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.*

*கருணை கலந்து என் கண்ணில் கலந்தான்*
*கருணை கலந்து என் கருத்தில் கலந்தான்*
*கருணை கலந்து என் எண்ணில் கலந்தான்*
*கருணை கலந்து என் பண்ணில் கலந்தான்*
*கருணை கலந்து என் பாட்டில் கலந்தான்*
*கருணை கலந்து என் உயிரில் கலந்தான்*

*வள்ளற்பெருமானும் இறைவனும் கலந்த கலப்பு எப்படிப்பட்ட கலப்பு. கருணை கலந்த கலப்பு! கருணைக்கலப்பு!*

திருச்சிற்றம்பலம்

## அருட்பெருஞ்ஜோதி அகவல்

**அன்பினில் கலந்து எனதறிவினில் பயின்றே**
**இன்பினில் அளைந்தஎன் இன்னுயிர் நட்பே 1180**

**நான்புரிவன எல்லாம் தான்புரிந்து எனக்கே**
**வான்பதம் அளிக்க வாய்த்த நன்நட்பே 1182**

**குணம்குறி முதலிய குறித்திடாது எனையே**
**அணங்கறக் கலந்த அன்புடை நட்பே 1188**

# திருமந்திரத் தேன்

**மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்**
**திண்ணென்று இருந்தது தீயினைச் சேர்ந்தது**
**விண்ணின்று நீர்விழின் மீண்டும் மண்ணானாற் போல்**
**எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே. - யாக்கை நிலையாமை**

*ஒருவகையான மண்ணே இருவகைக் கலமாகும். ஒன்று தீயினைச் சேர்ந்து வன்மையாக இருந்தது. மற்றொன்று தீயினைச் சாராது தன்னியல்பாய் பசுமண்ணாய் மென்மையாக இருந்தது. விண்ணில் நின்று மழைநீர் விழுந்தால் தீயினைச் சாராத பசுமட்கலம் அழிந்து மீண்டும் மண்ணாகும். தீயினைச் சார்ந்த கலம் அழியாது நிலைபெற்று நிற்கும். தீயினைச் சாராத கலம்போன்றது திருவருள் வழி நில்லாத உடம்பு. அது தன்னகத்துள்ள ஆவி உறுதிப்பயனாகிய சிவத்தன்மை எய்துதற்கு வாயிலாகாமல் மீண்டும் பிறப்பதற்கு வாயிலாகி அழிகின்றது. அவ உடம்பினைக் கழித்து எண்ணிறந்த மாந்தர் இறந்து ஒழிகின்றனர். தீ - இறைவன்; நீர் - திருவருள். இறைவன் திருவடி நினைவினையுடையார் இறவார். அந்நிலை , மாறா உறுதியான திண்ணென்ற அருள்நிலை.*

**வளத்திடை முற்றத்தோர் மாநிலம் முற்றுங்**
**குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்**
**குடமுடைந் தால்அவை ஓடென்று வைப்பர்**
**உடலுடைந் தால்இறைப் போதும்வை யாரே. - யாக்கை நிலையாமை**

*மாயா காரியமாகிய குடமும் உடலும் முறையே குயவனாலும் இறைவனாலும் செய்யப்படுவன. ஆனால் குடமுடைந்தால் வறையோடு என்று அகத்தே வைப்பர். உயிர் நீங்கினால் அவ்வுடம்பினைக் கண்ணிமைக்கும் நேரம் வரையிற்கூட வீட்டில் வைத்திருக்கப் பொறார். குடம் செய்வதற்கு வளமான முற்றமும் வாய்ப்பான மண்ணும் வேண்டும். அம்மண் குளத்தினின்றும் பெரும்பாலும் எடுக்கப்பெறும். அதுபோல் உடம்புக்கு, தாய் வயிறு முற்றத்தை ஒக்கும். கருப்பை குளத்தினை ஒக்கும். மண் செந்நீரை யொக்கும். வினைமுதற் காரணனாகிய இறைவன் குயவனை ஒப்பான்.*

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

## ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

| | |
|---|---|
| காலை உணவிற்கு | - ரூ.2,500/- |
| மதிய உணவிற்கு | - ரூ.6,500/- |
| இரவு உணவிற்கு | - ரூ.3,500/- |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு | - ரூ.4,000/- |
| பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) | - ரூ.2,500/- |
| அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) | - 15 லிட்டர் |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

## Please donate - Cheque / DD In favour of

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

## Please donate through:

**HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

## Please send MO to:

அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-

**8012680865, 7502026565**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

அன்பு அருள் ஆனந்தம் உணர்த்தும்

# ஆழ்நிலை தியான முகாம்



இயற்கைச் சூழலில் மூன்று நாட்கள்...

**இந்த பயிற்சி முகாமில்...**

- யோகாசனம்
- பிராணாயாமம்
- மௌனம்
- ஆழ்நிலை தியானம்
- திருவருட்பா பாராயணம்
- மூலிகைக் குறிப்புகள்

போன்றவை கற்றுத் தரப்படும்.

**நாள்: டிசம்பர் 23, 24 & 25 சனி, ஞாயிறு & திங்கள்**
மூன்று நாட்கள் முழுவதும்

**இடம்: வள்ளலார் சத்திய யோக சாலை,**
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

**முன்பதிவிற்கு: 8838540176, 7502026565**

## பயிற்சியில் கலந்துகொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. பயிற்சியில் கலந்துகொள்வோர் டிசம்பர் 22 – ஆம் தேதி வெள்ளி இரவிற்குள் வந்துவிட வேண்டும்.
2. 17 வயதிற்கு மேல் உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
3. டார்ச் லைட் கண்டிப்பாக எடுத்து வரவும்.
4. அன்பர்கள் 3 நாட்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களோடு படுப்பதற்கும், யோகா செய்வதற்கும் 2 பெட்ஷீட், அணிவதற்கு ஆண்கள்: டீஷர்ட், ஷார்ட்ஸ் மற்றும் பெண்கள்: சுடிதார் போன்ற வசதியான ஆடைகளை எடுத்துவரவும். குறிப்பு எடுக்க நோட்டு பேனா எடுத்து வரவும்.
5. பயிற்சியில் மூன்று நாட்கள் முழுவதும் கலந்துகொள்ள வேண்டும். டிசம்பர் 25 திங்கள் மாலை 5 மணிக்கு முகாம் முடிந்துவிடும்.

**பஸ் ரூட்:** பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58 (கடைசி பஸ் இரவு 9:30க்கு)
உடுமலையிலிருந்து பஸ் எண்: 28, 34 (கடைசி பஸ் இரவு 8:30க்கு)

உங்களுக்கு நீங்களே இந்த மூன்று நாட்கள் வாய்ப்பளியுங்கள்.
முதலில் பதிவுசெய்யும் 50 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly November 2017, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).



அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# ஆன்மீக சத்சங்க விழா

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

நாள்: 26-11-2017, ஞாயிற்றுக் கிழமை

இடம்: அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.



- அகவல் பாராயணம் - சன்மார்க்க அன்பர்கள்
- சிறப்பு சத்சங்கம் - சன்மார்க்க சாதுக்கள்
- ஜோதி தியானம்
- திருவருட்பா இசைக் கச்சேரி
- ஜோதி வழிபாடு

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

அனைவரும் அருள் பெற வருக! வருக!!

தொடர்புக்கு: 75020 26565, 99651 50531

திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865